අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# சித்திரம்

## வினாத்தாள் I



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 43 | T | I |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| சித்திரம் - I | நேரம் : 1 மணித்தியாலம் |
|---|---|

**அறிவுறுத்தல்கள்**

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

- **கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 01 – 05 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**



1. சிறிய தூபியைப் பாதுகாப்பதற்காகக் கட்டப்பட்ட இவ்வமைப்பானது ......................... என அழைக்கப்படுகிறது.

2. இக்கட்டடம் ...................................... காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது.

3. இக்கட்டடம் 1ம் பராக்கிரமபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டு .......................... மன்னனால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

4. இங்குள்ள கலைப்படைப்புக்களான ..............................லும், நாகராஜ காவற்கல்லும் வடக்கு வாயிலை அலங்கரிக்கும் பிரதான கலையம்சங்களாகும்.

5. இக்கட்டடத்தின் மேல் மாடியில் நான்கு இதழ்கள் கொண்ட ....................... அலங்காரமானது கல்வேலியை அழகுபடுத்துகின்றன.

- **6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

6. பொத்குல் விகாரைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள பொலநறுவைக் காலத்திற்குரிய கற்சிலை யாது?

.............................................................................................................

7. ஆபிரிக்க வேடமுகக்கலையின் செல்வாக்கைக் காட்டும் பிக்காசோவின் ஓவியம் யாது?

.............................................................................................................

8. தடித்த கருநிறக் கோடுகளைப் பயன்படுத்தி மட்பாண்டக்கடையையும், ஒரு தம்பதியினரையும் காட்டும் ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?

.............................................................................................................

9. சிகிரியா ஓவியங்களில் உள்ள மலரேந்திய பெண்களை ஆனந்தகுமாரசுவாமி எவ்வாறு அழைத்தார்?

.............................................................................................................

10. பன்கல்ல எனும் கற்பாறை மீது அமைக்கப்பட்ட விகாரையிலுள்ள பிரதான புத்தசிலையின் காவியுடை மடிப்பின் வடிவம் யாது?

.............................................................................................................

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. ஈசுருமுனியா விகாரையில் காணப்படும் நீராடும் யானைச் செதுக்கலானது,
    1. இயற்கைக்கற்பாறையில் பூரணபுடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.
    2. பல்லவ சிற்பமரபில் இந்தியாவின் மாமல்லபுரத்து கங்காவரோகணச் செதுக்கல்களை ஒத்திருக்கின்றன.
    3. இயற்கையான வடிவமைப்பில் மிருதுவான தன்மையில் குப்தகலைமரபில் நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது.
    4. யானைகளின் அசைவு, சந்தம், துடிப்பு என்பன வெளிப்படும் விதத்தில் இயற்கைத்தன்மையில் செதுக்கப்படவில்லை.

12. ஜோர்ஜ்கீற்றினால் வரையப்பட்ட ‘மாரயுத்தம்’ எனும் ஓவியமானது,
    1. களனிவிகாரையில் வரையப்பட்ட புத்தசரிதை நிகழ்வுகளில் ஒன்றைக் காட்டப்பட்டுள்ளது.
    2. விசித்திரமான அரூபவடிவங்களைப் பயன்படுத்தி யுத்தப்படையினரின் சுபாவத்தைக் காட்டியுள்ளார்.
    3. பிக்காசோவின் கனவடிவவாதப்பாணியில் கோதமி விகாரையில் வரையப்பட்டுள்ளது.
    4. இரேகைகளின் தன்மையைப் போலவே குளிர்வர்ணங்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

13. சாஞ்சித்தோரண வேலைப்பாடுகளில் காணப்படும் சிறப்பியல்பானது,
    1. செதுக்கல்கள் மிக நுணுக்கமாக சிறுபுடைப்பு முறையில் தளம் முழுவதும் இடைவெளியின்றி செதுக்கப்பட்டுள்ளன.
    2. விலங்குகளின் மெய்நிலைகள், அசைவுகளைக் கேத்திர கணித வடிவமைப்பில் செதுக்கப்பட்டுள்ளன.
    3. தோரண வேலைப்பாடுகளை நிர்மாணித்த கலைஞன் புத்தபெருமானின் உருவங்களை செதுக்கல்களில் வெளிப்படுத்தியுள்ளான்.
    4. தோரணச் செதுக்கற் தளப்பரப்பில் உருவங்கள் அதிக இடைவெளிகளுடன் நுணுக்கமாக சிறுபுடைப்பு முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

14. கலாவாவிக்கண்மையில் உள்ள அவுக்கண புத்தசிலை நிர்மாணமானது,
    1. கருங்கற் பாறையில் அரைப்புடைப்பு முறையில் செதுக்கப்பட்டுள்ளது.
    2. தாமரைப் பீடத்தின் மீது நிற்கும் இச்சிலையின் வலதுகரம் கடகஸ்த முத்திரையுடன் காணப்படுகிறது.
    3. இந்தியாவின் குப்த மரபின் இயல்புகள் காணப்படுவதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
    4. இயற்கையான கருங்கற்பாறையில் அமராவதி கலைமரபின் இயல்புகளுடன் முழுப்புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

15. பௌத்தர்களின் புனிதத்தலமான தலதா மாளிகையானது,
    1. கண்டி நகர்க்காலத்து தாழ்நாட்டு விகாரை ஓவியங்களை இங்கு காணலாம்.
    2. இங்குள்ள எண்கோண மண்டபத்தினை அமைத்த பெருமை தெய்வேந்திர மூலாச்சாரியாருக்குரியதாகும்.
    3. புனித தந்த ஆலயமான இக்கட்டடம் 3ம் விக்கிரமபாகு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
    4. தலதா மண்டபம், சபாமண்டபம், நீராடும் இடம், ஓய்வு மண்டபம் போன்ற அம்சங்கள் இங்கு காணப்படவில்லை.

- ***16* தொடக்கம் *20* வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படங்களுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள A,B,C,D,E ஆகிய உருக்களிலிருந்து தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16.



(……….)



A

17.



(……….)



B

18.



(……….)



C

19.



(……….)



D

20.



(……….)



E

- **21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிகளைப் பொருத்தமான சொல்லினை இட்டு பூரணப்படுத்துக.**

*21.* தேவலோகத்தில் வசித்த போதிச்சத்துவருக்கு மண்ணுலகில் பிறக்கம்படி தெய்வத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை வெளிப்படுத்தும் பொலநறுவைக்காலத்திற்குரிய ஓவியம் ………………………… யில் காணப்படுகிறது.

*22.* சிங்கள செய்தித்தாளுக்குப் பணியாற்றிய ஜிப்றி யுனூஸ் எனும் கலைஞனின் சிறந்த காட்டூன் கதாப்பாத்திரம் ………………………… ஆகும்.

*23.* கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ………………………… பாடநூலுக்கான முகப்பு அட்டையினை சிவசுப்பிரமணியம் வடிவமைத்துள்ளார்.

*24.* கம்பளைக் காலத்தில் உருவாக்கப்பட்ட எம்பக்க தேவாலய மரச்செதுக்கு வேலைப்பாடுகளை ………………………… எனும் சிற்பாச்சாரியாரும், அவரது சீடர்களும் நிர்மாணித்துள்ளனர்.


*25.* பொலநறுவைக் காலத்தில் முதலாம் இராஜராஜ சோழ மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட 2ம் சிவாலயம் …………………………கட்டடமரபிலானதாகும்.

- **26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு F,G,H,I,J ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**


F


G


H


I


J

*26.* F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அஜந்தாவின் 17ம் குகையில் காணப்படும் ஓவியத்தின் பெயர் யாது?

……………………………………………………………………………………………..

*27.* G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'தூண்டுதல்' எனும் இவ்வோவியம் வரையப்பட்ட காலப்பகுதி யாது?

……………………………………………………………………………………………..

*28.* H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாறை மீது கன்னி எனும் மறுமலர்ச்சிக்கால ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?……………………………………………………………………………………

*29.* I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கண்டியகால ஓவியம் காணப்படும் இடம் யாது?

……………………………………………………………………………………………..

*30.* J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள காளிதாசரினால் புனையப்பட்ட காவியநாயகியான சகுந்தலை எனும் ஓவியத்தின் கலைமரபு யாது?……………………………………………………………………

- ***31 தொடக்கம் 35 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஓர் வாக்கியம் வீதம் எழுதுக.***

*31.* தஞ்சாவூர்ப்பாணி : ..............................................................................................

..............................................................................................

*32.* மகுளுமெட்டி : ..............................................................................................

..............................................................................................

*33.* கியரஸ்கியூரோ : ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

*34.* குருளுகலாவ : ..............................................................................................

..............................................................................................

*35.* மகரம் : ..............................................................................................

..............................................................................................

- ***36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தரப்பட்ட வர்ண ஒளிப்படத்தினைப் பயன்படுத்துக.***



*36.* தொனிப்பொருள் : ..............................................................................................

*37.* கலைஞர் : ..............................................................................................

*38.* காணப்படும் இடம் : ..............................................................................................

*39.* உணர்வு வெளிப்பாடு: ..............................................................................................

..............................................................................................

*40.* ஒழுங்கமைப்பு : ..............................................................................................

..............................................................................................

(40X1=40புள்ளிகள்)

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## சித்திரம்

## வினாத்தாள் II



ளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கி

**கல்வி அமைச்சு**

| 43 | T | II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| சித்திரம் - II | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- உங்கள் சுட்டெண்ணை விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- போஸ்ரர் வர்ணம், நீர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.

**சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்**

- உங்களுக்கு முன்னாலுள்ள பொருட்கூட்டத்தை நன்றாக அவதானிக்குக.
  1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளைநிற A4 பருமட்டத் தாளை பயன்படுத்துக.
  2. பொருட்தொகுதி உங்களுக்குக் காட்சியளிக்கும் விதத்தில் வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.
- இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து பரீட்சை மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்குக.
- உங்கள் வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்க.

**சுயாதீன ரேகை கற்கை :-**

1. பரும்படியான தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்கள்

**வர்ணச் சித்திரம் :-**

2. தளத்துக்கு உகந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்
3. அளவிடைகள், துாரநோக்கு, முப்பரிமாண அளவு பற்றிய உமது விளக்கம்
4. தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக் காட்டல்
5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன்
6. பொருத்தமான வர்ணப் பின்னணியும் ஒட்டு மொத்த பூரணப்பாடும்

**மிகமுக்கியம் :**

பொருட்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்தொகுதிக்குப் பொருந்தும் வகையில் மாற்றி வரைவதற்கு உங்களிற்கு அனுமதி உண்டு.

(30 புள்ளிகள்)

ளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கி

# கல்வி அமைச்சு

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| | |
|---|---|
| சித்திரம் - II | நேரம் : 2 மணித்தியாலம் |


**ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுறுத்தல்**

1. பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் மேசை 73cm உயரமுடையதாக இருக்க வேண்டும்.
2. பொருட்கள் யாவும் கண்மட்டத்திற்கு சற்றுக்கீழாகவும் செடி கண்மட்டத்தில் இருக்குமாறு ஒழுங்குபடுத்துக.
3. ஆதாரப்பலகையினை பொருள் ஒழுங்கிற்கு ஏற்ற அளவில் பொருத்தமாக பயன்படுத்துக.
4. ஒரு பொருட்கூட்டத் தொகுதியினை வரையும் மாணவர்கள் 2m இற்கு குறையாத தூரத்திலும், 4m இற்கு மேற்படாத தூரத்தில் அமர்வதை கருத்தில் கொள்க.
5. ஒரு தொகுதியில் ஆகக்கூடியது 15 மாணவர்களுக்கு மேல் இருத்தல் கூடாது.

**ஒழுங்குபடுத்த வேண்டிய பொருட்கூட்டம்**



மேற்பக்கத் தோற்றம்



**தேவையான பொருட்கள்**

1. பெட்டி (24x18x11அங்குலம்) வெள்ளை டிமைற் தாளினால் ஒட்டிவிடுக.
2. பிளாஸ்ரிக் கைபிடியுடன் கூடிய ஜக் (Jug, 13cm- மஞ்சள்நிறம்)
3. கண்ணாடி முழுப்போத்தல் (போத்தலுக்குள் ஊதா நிற நீரை அரைவாசிக்குள் ஊற்றுதல்.)
4. சீத்தைத் துணி (1/2 மீற்றர்)
5. உரித்த தேங்காய்
6. வர்ணக் குரோட்டன் கிளை
7. ஆதாரப்பலகை

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## சித்திரம்

## வினாத்தாள் III



ளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கி

**கல்வி அமைச்சு**

| 43 | T | III |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| சித்திரம் - III | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- உங்கள் சுட்டெண்ணை விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
- போஸ்ரர் வர்ணம், நீர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.

**"அ" பகுதி அல்லது "ஆ" பகுதி அல்லது "இ" பகுதியில் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக..**

**பகுதி "அ "- கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்**

1. வழிபாட்டிடம் ஒன்றில் பெண் வியாபாரியிடம் பூக்களை / பூமாலையை கொள்வனவு செய்யும் பக்தர்கள்.
2. வேலைத்தளமொன்றில் மதிய உணவருந்தும் தொழிலாளர்கள்.
3. கடற்கரையில் நடைபெறும் சூடான மீன் வியாபாரம்.
4. மாலை நேரத்தில் வீடு நோக்கிச் செல்லும் மந்தைக் கூட்டம்.

**பகுதி "ஆ"- அலங்காரச்சித்திரம்**

5. மேல் நோக்கி தொடராக பரவலடைந்து செல்லும் பூக்கள், இலைகள், பழங்கள், கொடிகளைக் கொண்ட கதவுத்திரைச் சீலைக்கான அலங்காரத்தை நிர்மாணிக்குக.
6. கட்டில் விரிப்பு ஒன்றிற்கான 8x12 அடி அளவுடைய முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்குக. (மூன்று வர்ணங்களை மட்டும் பயன்படுத்துக.)
7. சீத்தைத்துணி ஒன்றிற்கான பரவல் அலங்காரமொன்றின் 8 x8 அங்கல அளவில் ஒரு பகுதியை தேமாப்பூக்கள், இலைகளைக் கொண்டு நிர்மாணிக்குக. பரவலைடையும் விதம் தொடர்பில் கவனம் செலுத்துக.

**பகுதி "இ "- கிரபிக்சித்திரம்**

8. 'நீர் வீண்விரையமாவதைத் தடுப்போம்' என்ற தலைப்பிலான வர்ணச் சுவரொட்டியொன்றை நிர்மாணிக்குக.
9. புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பால்மா ஒன்றிற்கான கொள்கலன்(பெட்டி) ஒன்றை வடிவமைக்குக.
10. பாடசாலையில் நடைபெறும் ஓவியக் கண்காட்சிக்கான விளம்பரப் பலகை ஒன்றை நிர்மாணிக்குக. (பின்னணி, சித்திரக்குறிப்புகளுடன், பெயர், திகதி, நேரம், இடம் என்பவற்றை உள்ளடக்குக.)

(30 புள்ளிகள்)